සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/06/EP/01/චක්‍රලේඛ - 2026
ඔබේ අංකය / உமது இல / Your No: ........................
දිනය / திகதி / Date: 2026.01.13

***சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம்: 2026/03***

அனைத்து மாவட்ட செயலாளர்கள் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் நாயகங்கள்,
அனைத்து மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
அனைத்து பிரதேச செயலாளர்கள்,
அனைத்து மாவட்ட சமுர்த்தி பிரதி / உதவி பணிப்பாளர்கள்,
அனைத்து மாவட்ட விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள்,
அனைத்து சமுர்த்தி தலைமையக, வங்கிச் சங்கங்க, திட்ட முகாமையாளர்களுக்கும்.

**சமுர்த்தி சந்தைப்படுத்தல் அபிவிருத்தி திட்டம் - 2026**
**சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் சமுர்த்தி பயனாளி குடும்பங்களின் இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி வழங்கல்.**

சமூக வலுவூட்டல் தேசிய திட்டத்தின் கீழ், சமுர்த்தி நலனுதவிகளை பெற்றுவந்த குடும்பங்களில் உள்ள இளைஞர் யுவதிகள் தொழில் பயிற்சியினை பெற்றுக்கொள்வதகான வாய்ப்புகளை வழங்கி அவர்களின் தொழில் திறன்களை விருத்தி செய்து அதனூடாக அவர்களை பொருத்தமான வேலைவாய்ப்புகளுக்கு இணைப்புச் செயவதன் மூலம் சமுர்த்தி நலனுதவிகளை பெற்றுவந்த குடும்பங்களின் வருமானத்தை அதிகரிப்பதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

02. இதன் கீழ், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் பயிற்சிக் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவுசெய்யப்பட்டு அந்த ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட NVQ -03 நிலை அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறிகள் மற்றும் சான்றிதழ் பாடநெறிகளை தொடர முடியும். மேலும் 2023 ஜூன் மாதத்தில் இறுதியான சமுர்த்தி நலனுதவி பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள குடும்பங்களின் இளைஞர் யுவதிகளுக்கே இந்த தொழில் பயிற்சிக்கான வாய்ப்பு வழங்கப்படும். இதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் முறைமையின் கீழ் பாடநெறியினை தொடரவும் தொழில் சான்றிதழ்களைப் பெறவும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுள்ளது.

I. முழு நேர நிறுவன மையப்படுத்தி பயிற்சி - Centre Board Training (CBT)
II. தொழில் முனைவு பயிற்சி- Enterprise Based Training (EBT)
III. முன்னைய கற்றல் அறிவை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடு - Recognition Prior Learning (RPL)

- RPL முறையின் கீழ் மட்டுமே, தற்போது அனுபவத்துடன் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தொழில் திறன் விருத்தி சான்றிதழ்களைபெற நடவடிக்கை எடுக்க முடியும். மேலும் இதற்கான வயதெல்லை 60 வரை எனக் கொண்டு இலக்கிடப்பட்ட நபர்களுக்கும் சலுகைகளை வழங்க முடியும்.

- தொழில் பயிற்சி பாடநெறிகளை தொடர மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் (TVEC) 2026 ஆம் ஆண்டிற்கு பதிவுசெய்யப்பட்ட அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். மேலும் பயிற்சியாளர்களும் உரிய பாடநெறிகளுக்கு 2026 ஆம் ஆண்டிலேயே பதிவு செய்யப்பட வேண்டியதும் கட்டாயமாகும்.

- மேலும், அரச நிறுவனங்களுடன் தலைமை அலுவலகம் ஒப்பந்தம் செய்துள்ளதால் மீண்டும் ஒப்பந்தம் செய்ய வேண்டிய அவசியமில்லை, ஆனால் தனியார் துறை பயிற்சி நிறுவனங்களுடன் பிரதேச மட்டத்தில் ஒப்பந்தங்களை செய்வது கட்டாயமாகும். மேலும் இங்கு, பயிற்சியாளர்களுடன் ஒப்பந்தம் செய்வதும் அவசியமாகும்.

- கட்டணங்கள் எதுவும் இன்றி கைத்தொழில் அமைச்சின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் கீழ் (DTET) நிறுவப்பட்டுள்ள தொழில்நுட்ப கல்லூரிகள், கைத்தொழில் கல்லூரிகள் நடத்தும் NVQ-03 மற்றும் அதற்கு மேற்பட்ட பாடநெறிகளையும், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTA) நடத்தும் NVQ-03 மற்றும் அதற்கு மேற்பட்ட பாடநெறிகளையும், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) நடத்தும் கைதொழில்துறை பயிற்சி (EBT) இன் கீழ் NVQ-03 மற்றும் அதற்கு மேற்பட்ட பாடநெறிகளையும் வெற்றிகரமாக முடிக்கும் பயிற்சியாளர்களுக்கு, குறிப்பிட்ட நிறுவனங்களால் பரிந்துரைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்களின் தொகுதியினை உரிய பெறுகை நடைமுறைகளுக்கு உட்பட்டு வழங்க முடியும் (உயரந்தபட்சம் ரூ. 50,000.00)

- தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பாடநெறிகளை தொடர்வதற்காக இணைப்புச் செய்யப்பட்ட பயிற்சியாளர்கள் தொடர்ச்சியாக கற்று வெற்றிகரமாக தமது பாடநெறிகளை முடித்த பின்னர் தொழில் ஒன்றை செய்வது தொடர்பாக படிப்படியான தொடர் கண்காணிப்புகளை மேற்கொள்வது கட்டாயமாகும்.

  ஒரு பயிற்சியாளருக்கு செலவிடக்கூடிய உயர்ந்தபட்ச பாடநெறி கட்டணம் ரூ. 50,000/= ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கு மேலான தொகை தேவையனின் பாடநெறி கட்டணம், உயர்ந்தபட்சம் ரூ. 100,000 வரை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் சிபாரிசுடன் சந்தைப்படுத்தல் பிரிவுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

- உங்களது மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட அளவு தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அந்தத் தொகையினையும் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளால் வழங்கப்படும் யொவுன் திரிய கடன்களையும் இதற்காக பயன்படுத்திக்கொள்ள முடியும். மேலும் இக்கடன்கள் தொடர்பான ஆலோசனைகள் 2025.12.23 ஆம் திகதிய DSD/HOMF/05/08/01/චක්‍රලේඛ மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றறிக்கை இலக்கம் - 2021/16 (புதிய) 08வது பிற்சேர்க்கை என்பவற்றின் ஊடாக வழங்கப்படுள்ளது.

- சம்பந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னரே பாடநெறி கட்டணங்களைச் செலுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- தொழிற்பயிற்சி நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது, கடந்த ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டதை போன்று பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொண்டு இம்முறை கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

I. பயிற்சி பெறுபவர் தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு உரிய பயிற்சிக்கான நிறுவனத்தை தெரிவு செய்தல் வேண்டும் (அரச / தனியார்).

II. தெரிவுசெய்யப்பட்ட தனியார் பயிற்சி நிறுவனங்களினால் வழங்கப்படும் தொழில் பயிற்சிகளின் செயல்திறனை விசேடமாக ஆய்வுசெய்து பார்த்தல்.

- தொழிற்பயிற்சிகளை வழங்கும் சில அரசு நிறுவனங்களின் பயிற்சி பாடநெறிகள் 2026 ஜனவரி மாதம் முதல் வாரத்தில் அல்லது அதனை அண்மித்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் அந்த நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதால், இந்த சுற்றறிக்கை வெளியிடப்படும் திகதி அதற்கு ஒரு தடையாக இருக்காது.

- தங்களது மாவட்டத்திற்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக நிர்வாகச் செலவுகளாக பிரதேச செயலகப் பிரிவிற்கு 01% மும், மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்கு 0.3% மும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

03. <u>நேரடியான வேலைவாய்ப்புக்களை இலக்காகக் கொண்ட NVQ மட்டம் இல்லாத சான்றிதழ் மற்றும் ஏனைய பாடநெறிகளுக்கு அனுமதி வழங்குவது குறித்து பரிசீலித்தல்.</u>

- TVEC நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் TVEC நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பாடநெறிகளை தொடர முன்வைக்கப்படும் கோரிக்கைகள்.

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் 2026 ஆம் ஆண்டுக்கன அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை இலக்காகக் கொண்ட பாடநெறிகளான வெளிநாட்டு மொழிப் புலமை மற்றும் தொழில் திறன் விருத்தி ஆகிய இரண்டு பயிற்சி வகைகளையும் ஒருங்கிணைந்த பயிற்சியாக கருத்தில் கொள்ளுதல்.

- இத்தகைய பாடநெறிகளுக்கு அனுமதியினை வழங்குவது குறித்து பரிசீலிக்க, வேலைவாய்ப்பில் இணைப்புச் செய்தல் தொடர்பான உரிய நடைமுறையுடன் தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. பயிற்சி பெறுபவர்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களை தெரிவு செய்யும் போது வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளை கவனத்தில் கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களின் விவரங்களை இணைப்பு - 01 இன் ஊடாக மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் சிபாரிசுடன் சந்தைப்படுத்தல் பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் அனுப்பி வைக்கும் பயிற்சியாளர்களின் விவரங்களை சமுர்த்தி சமூக அபிவிருத்தி பொறுப்பு நிதியத்திற்குச் சமர்ப்பித்து அனுமதி கிடைத்த பின்னர் பாடநெறிக் கட்டணம் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சி.டி. களுஆராச்சி
பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள் :-
01. மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர்கள். - தகவலுக்காக.
02. செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - தகவலுக்காக.
03. அனைத்து மாகாண பிரதம செயலாளர்களுக்கும் - தகவலுக்காக.
04. கணக்காய்வாளர் நாயகம், கணக்காய்வு திணைக்களம் - தகவலுக்காக.
05. பிரதம நிதி அதிகாரி, சமு. அபி. திணைக்களம். - தகவலுக்காகவும், உ.ந.பொ.
06. பிரதம உள்ளக கணக்காய்வாளர், சமு. அபி. திணைக்களம். - தகவலுக்காகவும், உ.ந.பொ.
07. கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சரின் தனிப்பட்ட செயலாளர்களுக்கு - உ.ந.பொ.
08. சகல கிளைத் தலைவர்களுக்கும், சமு. அபி. திணைக்களம் - தகவலுக்காகவும், உ.ந.பொ.
09. அனைத்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்ளுக்கும் - தகவலுக்காகவும், உ.ந.பொ.
10. அனைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் - தகவலுக்காகவும், உ.ந.பொ.
11. அனைத்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் - தகவலுக்காகவும், உ.ந.பொ.

**Translate by :-**
**I. Aliyar**
**District Director ( Ret.)**

இணைப்பு - 01

சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நித்தியத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அஸ்வெசும பெறாத சமுர்த்தி நன்மைகளை பெற்றுவந்த குடும்பங்களை இலக்காக வைத்து தொழில்பயிற்சி வேலைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீட்டை கோரல்.

மாவட்டம் :....................

| தொ. இல. | பிரதேச செயலக பிரிவு | பயிற்சி பெற கோரும் துறை | பயிற்சி வழங்கும் நிறுவனத்தின் பெயர் | .பாடநெறியின் தன்மை (NVQ/ சான்றிதழ்) | பாடநெறிக் காலம் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை | பாடநெறிக் கட்டணம் | நிதியத்தின் பங்களிப்பு | பயிற்சியாளரின் பங்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

மாவட்ட விடயபொறுப்பு உத்தியோகத்தரின் பெயர்

பணிப்பாளரின் சிபாரிசு

கையொப்பம்

Annexure-02

## Empowerment Development Program-2026
## Financial Allocation for Vocational Training and Skills Development for Samurdhi Benefited Families

| No | District | No of Samurdhi Bank | Amount (Rs.) |
|---|---|---|---|
| 1 | Colombo | 42 | 10,500,000.00 |
| 2 | Gampaha | 88 | 22,000,000.00 |
| 3 | Kalutara | 56 | 14,000,000.00 |
| 4 | Galle | 69 | 17,250,000.00 |
| 5 | Matara | 50 | 12,500,000.00 |
| 6 | Hambanthota | 42 | 10,500,000.00 |
| 7 | Kandy | 91 | 22,750,000.00 |
| 8 | Matale | 40 | 10,000,000.00 |
| 9 | Nuwareliya | 39 | 9,750,000.00 |
| 10 | Kegalle | 45 | 11,250,000.00 |
| 11 | Ratnapura | 46 | 11,500,000.00 |
| 12 | Kurunegala | 120 | 30,000,000.00 |
| 13 | Puttalam | 49 | 12,250,000.00 |
| 14 | Polonnaruwa | 22 | 5,500,000.00 |
| 15 | Anuradhapura | 55 | 13,750,000.00 |
| 16 | Badulla | 47 | 11,750,000.00 |
| 17 | Monaragale | 27 | 6,750,000.00 |
| 18 | Ampara | 45 | 11,250,000.00 |
| 19 | Batticalo | 31 | 7,750,000.00 |
| 20 | Trincomale | 22 | 5,500,000.00 |
| 21 | Jaffna | 33 | 8,250,000.00 |
| 22 | Kilinochchi | 8 | 2,000,000.00 |
| 23 | Mannar | 10 | 2,500,000.00 |
| 24 | Vavuniya | 10 | 2,500,000.00 |
| 25 | Mullaitivu | 10 | 2,500,000.00 |
| | **Total** | **1097** | **274,250,000.00** |